3rd September 1958]

என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? அப்படி இல்லாவிட்டால், உடனடியாக அந்த ஹரிஜனங்களுக்கு ஆதரவு கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் தயவு செய்து தனிக்கேள்வி போடலாம்.

SRI S. NAGARAJA MONIGAR : சர்க்கார் இம்மாதிரி குற்றங்களைக் கண்டித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் ஹரிஜனங்களுக்கென்று தனியாக சேரிகளை அமைப்பது, குடி தண்ணீர் கிணறுகளை வெட்டுவது என்று இருப்ப தானது சர்க்காரையும் இவ்விஷயத்தில் ஒரு குற்றவாளி என்று ஏற்படுத்தி விடும் அல்லவா?

MR. SPEAKER : The question is out of order.

Bus service

*7 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா, சின்னமனூரிலிருந்து சிப்பாலகோட்டைக்கு பஸ் விட வேண்டுமென கலெக்டர் முதலானோர் அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்துள்ளனரா?

(ஆ) அப்படியானால், அதுசம்பந்தமாய் எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) No, Sir.

(b) Does not arise.

Prohibition offences

*8 Q.—SRI M. S. SELVARAJAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

மதுவிலக்குக் குற்றங்களில் தண்டனை பெறுபவர்களின் பெயர் விவரங்களை ஜில்லா கெஜெட்டுகளிலும், பத்திரிகைகளிலும் பிரசுரிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, the answer is in the negative.

SRI M. S. SELVARAJAN : சார், மதுவிலக்குக் குற்றவாளியாக இருக்கும் மானமுள்ள ஒருசிலரையாவது திருத்துவதற்காக இம்மாதிரியான வேறு திட்டங்களையாவது அரசாங்கம் பரிசீலனை செய்கிறதா அல்லது செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மது விலக்குக் குற்றம் செய்தவர்களுக்குக் கோர்ட்டுகள் தண்டனை கொடுக்கிறது. அவர்கள் பெயர்களை கெஜட்டில் பிரசுரம் செய்யவேண்டிய அவசியம் இல்லை யென்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

Sales tax

*9 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, தேனீயில் (அ) சென்ற ஆண்டு (1957–58), (ஆ) இந்த ஆண்டு (1958-ம் ஆண்டு ஏப்ரல் மீ 30௳ வரை) விற்பனை வரி மூலம் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM :

	RS.	NP.
1957–58	**3,05,843**	**52**
April 1958	**14,153**	**28**

[3rd September 1958

SRI N. R. THIAGARAJAN : இவ்வளவு வருமானம் கொடுக்கக் கூடிய ஊரில் ஒரு ஆஸ்பத்திரி கூட இல்லையென்று பொதுஜனங்கள் கருது கிறார்களே, அங்குள்ள மக்களின் சுகாதார வசதியை உத்தேசித்து உட னடியாக ஒரு ஆஸ்பத்திரியை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

MR. SPEAKER : அதற்குத் தனியாக கேள்வி போடுங்கள்.

Village Officers

* 10 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the salaries of village officers in zamin, inam and mitta areas are the same as those in ryotwari areas?

THE HON. SRI M. A. MANICKAVELU : The answer is in the affirmative.

SRI N. K. PALANISAMI : 1951-ல் ஜமீன் மிட்டா இவற்றை ரயத்வாரியாக மாற்றியபோது அங்குள்ள சிப்பந்திகளுக்கும் ரயத்துவாரி ஏரியாவில் உள்ளவர்களுக்கும் கொடுக்கப்படும் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். ஐந்து வருஷம் கழித்து அவர்கள் சம்பளம் ஒன்றாக்கப்பட்ட தால் அந்த ஐந்து வருஷத்திற்கும் அவர்களுக்குச் சேரவேண்டிய பாக்கி யைக் கொடுக்க சர்க்காரிடத்தில் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஜமீன் இனும் எடுத்துக் கொள்வதில் சில தகராறு எழுந்து கோர்ட்டுக்குப் போகும்படியாக இருந்தது. கடைசியாக இவையெல்லாம் தீர்ந்த பிற்பாடு அவை சர்க்காரால் எடுத்துக்கொண்ட பிற்பாடு புது சம்பள விகிதாசாரம் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Industrial co-operatives

* 11 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of industrial co-operatives for weavers, so far started;

(*b*) whether there is any proposal to start more co-operatives in 1958–59; and

(*c*) if so, how many and at what places?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Seven industrial co-operatives for handloom weavers have been started so far

(*b*) & (*c*) Yes, Sir, it is proposed to set up four more industrial co-operative societies during 1958–59, one each at Rajapalayam and Paramakudi in the Ramanathapuram district, one at Vijayamangalam in the Coimbatore district and one at Thirumizhisai in the Chingleput district.

SRI K. RAMACHANDRAN : இந்த இண்டஸ்டிரியல் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் எவ்வளவு மூலதனம் கொடுத்திருக்கிறது ? மெம்பர்களிடமிருந்து எவ்வளவு எதிர்பார்க்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ஸ்தாபனங்களில் எவ்வளவு அங்கத்தினர்கள் சேருகிறார்களோ அந்த எண்ணிக்கையைப் பொறுத்தது அவ்விஷயம். ராஜபாளையம் தொழில் கூட்டுறவு ஸ்தாபனத்தைப் பொறு த்த வரையில் மானியம் 3,600 ரூபாய் கொடுக்கப்படுகிறது. கடனாக ரூ. 33,080 கொடுக்கப்பட்டிருக்கிறது.